Diploma, Anna University-UG, PG., HSC & SSLC

*Notes*
*Syllabus*
*Question Papers*
*Results and Many more…*

*Available @*
www.AllAbtEngg.com

KA

# முதல் திருப்புதல் பொதுத் தேர்வு-2020

## பத்தாம் வகுப்பு

Reg.No. [ | | | | | ]

## தமிழ்

*நேரம்: 3.00 மணி* *மதிப்பெண்கள்: 100*

குறிப்பு : வினா எண் 21 மற்றும் 34 வது வினாக்களுக்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்

பகுதி - I (மதிப்பெண்கள் 15)

15 x 1 = 15

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

I. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீடுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. பொருளறிந்து பொருத்துக:

அ) இறடி - 1. சோறு
ஆ) பொம்மல் - 2. தினை
இ) கரும்பு - 3. பள்ளம்
ஈ) படுகர் - 4. சுற்றம்

அ) 1,3,4,2 ஆ) 3,4,2,1 இ) 2,1,4,3 ஈ) 4,3,2,1

2. 'வாயு வழக்கம் அறிந்து செறிந்தடங்கில் ஆயுள் பெருக்கம் உண்டாம்' - இப்பாடல் அடிகளுக்கு உரியவர்

அ) இளங்கோவடிகள் ஆ) கம்பர் இ) திருமூலர் ஈ) ஒளவையார்

3. 'பரிபாடல்' அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?

அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் பேரொலியையும்
இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் புகழையும்

4. 'பகைவர் இன்றியும் தானே கெடும் மன்னன்' காரணம் ..........

அ) இடித்துக் கூறும் பெரியாரைத் துணைக் கொள்ளாதவர்
ஆ) நல்லாட்சி நடத்துதல்
இ) மக்கள் நலம் பேணுதல் ஈ) ஒழுக்கத்தைக் கடைபிடித்தல்

5. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது

அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

6. 'உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்
உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்'

பாரதியின் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை?

அ) உருவகம் ஆ) மோனை, எதுகை இ) முரண், இயைபு ஈ) உவமை, எதுகை

7. காளைகளை ஒட்டிக் <u>கடுகிச் செல்</u> முன்பு - இவ்வடியில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?

அ) மெதுவாக செல் ஆ) நடந்து செல் இ) மறைந்து செல் ஈ) விரைந்து செல்

8. இருவர் உரையாடுவது போன்ற ஓசை

அ) அகவலோசை ஆ) செப்பலோசை இ) துள்ளல் ஓசை ஈ) தூங்கலோசை

9. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையாகவும் சவாலுமாகவும் செயக்காந்தன் கருதுவது

அ) அரசின் நலத்திட்டங்களை செயல்படுத்துதல்
ஆ) அறிவியல் முன்னேற்றம்
இ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல் ஈ) வெளிநாட்டு முதலீடுகள்

10. முல்லை நில பறை _______ ஆகும்.

அ) மீன் கோட்பறை ஆ) தொண்டகம் இ) துடி ஈ) ஏறுகோட் பறை

11. "கழிந்த பெரும் கேள்வியனான் எனக்கேட்டு
முழுது உணர்ந்த கபிலன் தன்பால் பொழிந்த
பெரும் காதல் மிகு கேண்மையினான் இடைக்
காட்டுப் புலவின் தென் சொல்,"

- இவ்வடிகளில் கழிந்த பெரும் கேள்வியினான் யார்? காதல் மிகு கேண்மையினான் யார்?

அ) குசேல பாண்டியன், கபிலன் ஆ) குசேல பாண்டியன், இடைக் காடனார்
இ) இடைக் காடனார், இறைவின் ஈ) இடைக் காடனார், கபிலன்

***பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடை தருக:***

பழுதுஇல் செய்வினைப் பால்கெழு மாக்களும்
குடிலினும் யாழினும் குரல் முதல் ஏழும்

Diploma, Anna University-UG, PG., HSC & SSLC
Notes
Syllabus
Question Papers
Results and Many more…
Available @
www.AllAbtEngg.com



வழுவின்றி இசைத்து வழித்திறம் காட்டும்
அரும்பெறல் மரபின் பெரும்பாண் இருக்கையும்
சிறுகுறுங் கைவினைப் பிறர்வினை யாளரொடு
மறு இன்றி விளங்கும் மருவூர்ப்பாக்கமும்

12. இப்பாடல் இடம் பெற்ற நூல் எது?
13. இப்பாடலின் ஆசிரியர் யார்?
14. இப்பாடலில் பயின்று வந்துள்ள அடி எதுகைகளை எடுத்தெழுதுக.
15. குழலினும் யாழினும் - இலக்கணக் குறிப்பு தருக.

**பகுதி - II (மதிப்பெண்கள் - 18)**

**பிரிவு - 1**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்:** 4 x 2 = 8

*(21 ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)*

16. 'காய்மணியாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்' - உவமை உணர்த்தும் கருத்து யாது?
17. 'வேர்டுஸ்மித்' என்றால் என்ன?
18. வசன கவிதை - குறிப்பு வரைக.
19. ஜெயக்காந்தன் பெற்ற விருதுகள் யாவை?
20. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க:
    அ) மரபார்ந்த கலைகளில் ஒன்று கரகாட்டம் ஆகும்.
    ஆ) நாடகக் கலையை மீட்டெடுப்பதே தமது குறிக்கோள் என்றார் ந.முத்துசாமி
21. 'கண்' என முடியும் திருக்குறளை எழுதுக.

**பிரிவு - 2**

**எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் விடையளிக்கவும்:** 5 x 2 = 10

22. முத்தமிழ் துய்ப்பதால், முச்சங்கம் கண்டதால் ....
    - இப்பாடலில் வரும் தொகைச் சொற்களை விரித்தெழுதுக.
23. கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளை திருத்தி எழுதுக.
    அ) உழவர்கள் மலையில் உழுதனர்.
    ஆ) முல்லைப் பூச்செடியை பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.
24. ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக.
    அ) உதகமண்டலம் ஆ) மன்னார்குடி இ) சைதாப்பேட்டை ஈ) மயிலாப்பூர்
25. கலைச்சொல் தருக: Emblem, Thesis

**குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான வினா:**

கீழ்க்காணும் சொற்களின் கூட்டப் பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக.

அ) கல் - கட்டு
ஆ) பழம் - மந்தை
இ) புல் - குவியல்
ஈ) ஆடு - குலை

26. தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்து எழுதுக:
    அ) கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும் ஆ) மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்
27. மயங்கிய - பகுபத உறுப்பிலக்கணம் தருக.
28. எண்ணுப் பெயர்களைக் கண்டுபிடித்து அவற்றை தமிழ் எண்களில் எழுதுக:
    அ) யானை ஆயிரம் அமரிடை வென்ற
    மாணவனுக்கு வகுப்பது பேரணி.
    ஆ) எறும்புந் தன் கையால் எண்சாண்

**பகுதி - III (மதிப்பெண் : 18)**

**பிரிவு - 1**

**எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க:** 2 x 3 = 6

29. முல்லை நிலத்திலிருந்தும், மருத நிலத்திலிருந்தும் கிடைக்கும் உணவுப் பொருட்கள் யாவை?

Available in /AllAbtEngg Android App too, Also check www.SmartPoet.Net & www.PhotoShip.Net

Diploma, Anna University-UG, PG., HSC & SSLC
Notes
Syllabus
Question Papers
Results and Many more…
Available @
www.AllAbtEngg.com



30. படங்கள் வெளிப்படுத்தும் நிகழ்த்து கலை குறித்து இரண்டு வினாக்களையும், அவற்றுக்கான விடைகளையும் எழுதுக.



31. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும்:**

தமிழர் போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர் அறம் என்பது வீரமற்றோர் புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது. போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்கு தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று ஒரு பாடல் கூறுகிறது. தம்மை விட வலிமை குறைந்தவரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிடுகிறார்.

அ) போரிலும் அறநெறிகளைப் பின்பற்றியவர் யார்? ஆ) போர் அறம் என்பது யாது?
இ) இவ்வுரைப் பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளி:** 2 x 3 = 6
*(34 ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)*

32. வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தினை விளக்குக.
33. வெண்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.
34. "நவமணி வடக்கயில் போல" எனத் தொடங்கும் வீரமாமுனிவரின் தேம்பாவணி பாடலை அடிபிறழாமல் எழுதுக. *(அல்லது)*
'சிறு தாம்பு தொடுத்த .....' என்ற முல்லைப் பாட்டு பாடலை அடிபிறழாமல் எழுதுக.

பிரிவு - 3

**எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க:** 2 x 3 = 6

35. கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்ட தமைச்சு - *இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.*
36. நிரல் நிறையணியினை சான்று தந்து விளக்குக.
37. பின்வருவனவற்றுள் கூரான ஆயுதம் எது என்று செந்நாப் போதார் கூறுகிறார்? ஏன் என்பதை எழுதுக.
பெரிய கத்தி, இரும்பு ஈட்டி, உழைத்ததால் கிடைத்த ஊதியம், வில்லும் அம்பும்

**பகுதி - IV (மதிப்பெண் : 25)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** 5 x 5 = 25

38. அ) கால மாற்றம் தமிழர் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்த கருத்துக்களை எழுதுக.

*(அல்லது)*

ஆ) இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன் வைத்து எழுதுக.

39. அ) நிகழ்வுகளைத் தொகுத்து அறிக்கை எழுதுக:

மகளிர் நாள் விழா

நாள் : 08.03.2019

இடம் : தேர்வரின் பள்ளியின் பெயர்
கலையரங்கத்தில் ஆசிரியர்கள் - மாணவர்கள் கூடுதல் - தலைமையாசிரியரின் வரவேற்பு - இதழாளரின் சிறப்புரை - ஆசிரியர்களின் வாழ்த்துரை - மாணவத் தலைவரின் நன்றியுரை.

*(அல்லது)*

ஆ) உங்கள் தெருவில் மின் விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால் ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவணச் செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.

Diploma, Anna University-UG, PG., HSC & SSLC

*Notes*
*Syllabus*
*Question Papers*
*Results and Many more…*

*Available @*

www.AllAbtEngg.com



40. காட்சியைக் கண்டு கவினுற கவிதை எழுதுக:



41. படிவத்தை நிரப்புக:

42. அ) புயலின் போது செயல்படுத்த வேண்டிய முக்கிய செயல்களைப் பற்றி எழுதுக.

*(அல்லது)*

ஆ) மொழிபெயர்க்க:

1. Education is what remain after one has forgotten what one has learned in school - Albert Einstein.
2. Success is not final, failure is not fatal. It is the courage to continue that counts. - Winston Churchill.

குறிப்பு செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா:

பாவை குறித்த செய்திகள் சங்க காலம் முதல் பதினெட்டாம் நூற்றாண்டு வரையான தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. திருக்குறளில் மரப்பாவையைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. திருவாசகத்திலும் பட்டினத்தார் பாடலிலும் தோற்பாவைக்கூத்து பற்றிய செய்திகளைக் காண முடிகிறது. ஊர் ஊராகச் சென்று நிகழ்த்துகிற கூட்டுக் குடும்பக் கலையாகத் தோற்பாவைக்கூத்து விளங்குகிறது. தோற்பாவைக் கூத்து கையுறைப் பாவைக் கூத்து, பொம்மலாட்டம் என்பனவாகவும் மாற்றம் பெற்றுள்ளது.

அ) மரப்பாவையைப் பற்றி குறிப்பிடும் நூல்?

ஆ) பாவை குறித்த செய்திகள் அடங்கிய இலக்கிய காலம்?

இ) தோற்பாவைக் கூத்தின் மாற்று வடிவங்கள் எவை?

ஈ) தோற்பாவைக் கூத்து பற்றி குறிப்பிடும் நூல்கள் யாவை?

உ) இவ்வுரைப் பத்திக்கு பொருத்தமான தலைப்பு தருக.

## பகுதி - V (மதிப்பெண்கள் : 24)

3 x 8 = 24

அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்:

43. அ) இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

*(அல்லது)*

ஆ) நிகழ்கலை வடிவங்கள் - அவை நிகழும் இடங்கள் - அவற்றின் ஒப்பனைகள் - சிறப்பும் பழமையும் - இத்தகைய கலைகள் அருகி வருவதற்கான காரணங்கள் - அவற்றை வளர்த்தெடுக்க நாம் செய்ய வேண்டுவன

*- இவை குறித்து ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக.*

44. அ) நல்லெண்ணம் படைத்த ஒரு வெள்ளையின மனிதரின் உதவியால் மேரி பெற்ற கல்வியையும், கல்வியால் அவள் செய்த சாதனைகளையும் தொகுத்தெழுதுக. *(அல்லது)*

ஆ) "மங்கையராயப் பிறப்பதற்கே" என்ற கூற்றிற்கு ஒப்பான பெண்மணிகளின் வாழ்க்கை நிகழ்வுகளை எழுதுக.

45. அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று தருக:

முன்னுரை - கல்பனா சாவ்லாவின் பிறப்பும் கல்வியும் - முதல் விண்வெளிப் பயணம் - கொலம்பியா விண்கல நிகழ்வு - முடிவுரை. *(அல்லது)*

ஆ) நீ நூலகத்தில் படித்த ஒரு நூலுக்கு மதிப்புரை எழுதுக.

******

*Available in /AllAbtEngg Android App too,* *Also check www.SmartPoet.Net & www.PhotoShip.Net*